# Deposition of Witness

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## In the Court of Judicial Magistrate No.III Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : C.C.No. 60 /2015 |
| Police Station | : Thiruppapuliyur |
| Deposition of witness for Prosecution | : LW7 / PW7 |
| Name | : விஜயகுமார் |
| Father Name/Husband Name | : மாசிலாமணி |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 12.08.2022 நாளாகிய இன்று திரு. ஜி. இரகோத்தமன், M.A.,L.L.B., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதன்மை விசாரணை</u>

1. நான் தற்போது சமாதிதோப்பு திருப்பாப்புலியூரில் வசித்து வருகிறேன். சென்ட்டிரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பானு என்பவரை எனக்கு தெரியும். அவர் விபத்தில் இறந்துபோன ராமு என்பவரின் மனைவி ஆவார். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் நேரிடையாக தெரியாது. எனக்கு வருடம் தேதி தெரியாது. நீண்ட நாட்களுக்கு முன்பு ஒரு நாள் என் மச்சான் போன் செய்து லாரி பானுமதியின் வீட்டிற்குள் ஏறி விபத்தில் அவரது கணவர் ராமு என்பவர் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டது.</u>

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

**2.** கடந்த 27.03.2014 ம் தேதி மதியம் நான் என் வீட்டில் இருந்தேன் என்றும் என் வீட்டிற்கு வடக்கு பக்கம் திருப்பாப்புலியூர் குப்பன்குளத்தை சேர்ந்த மாயாண்டி என்பவர் தர்பூசணி பழம் வைத்து விற்றுக்கொண்டிருந்தார் என்றும் அப்போது திருப்பாப்புலியூர் கம்மியம்பேட்டை ஒரு வழிப்பாதையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அதிவேகமாகவும், தாறுமாறாகவும் வந்த மீன்லாரி என் வீட்டின் எதிர்புறம் மெயின்

ரோட்டில் வலது பக்க வளையில் திரும்ப வேண்டியவர் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் வலது பக்கம் திரும்பாமல் நேரே வந்து தர்பூசணி விற்றுக்கொண்டிருந்த மாயாண்டி மீது மோதினார் என்றும், நாங்கள் பயந்து ஓடினோம் என்றும் மாயாண்டி மீது மோதிய லாரி மேலும் வடக்கு பக்கம் சென்று மின் கம்பத்தின் மீது மோதி மின் கம்பம் உடைந்து ராமு என்பவர் வீட்டின் மீது லாரி கவிழ்ந்தது என்றும் கூறினால் சரியல்ல.

**3.** அப்போது வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த ராமு என்பவர் உடல் நசுங்கி இறந்து விட்டார் என்றும், மாயாண்டிக்கு வலது காலில் பலத்த அடிப்பட்டது என்றும், லாரியை ஓட்டி வந்த டிரைவருக்கு லேசான காயம் ஏற்பட்டது என்றும், பிறகு தீ அணைப்பு வண்டியை வரவழைத்து ராமு பிரேதத்தையும், அடிப்பட்ட மாயாண்டி மற்றும் டிரைவர் ஆகியோர்களை கடலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் நான் இவை அனைத்து விவரங்களையும் போலிசாரிடம் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றுவதற்காக பிறழ்சாட்சியாக மாறி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை என்று கூறப்பட்டது.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III,
Cuddalore.

# Deposition of Witness

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No. 60 /2015 |
| Police Station | : Thiruppapuliyur |
| Deposition of witness for Prosecution | : LW10 / PW8 |
| Name | : மோகனகிருஷ்ணன் |
| Father Name/Husband Name | : நாராயணசாமி |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 12.08.2022 நாளாகிய இன்று திரு. ஜி. இரகோத்தமன், M.A.,L.L.B., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதன்மை விசாரணை</u>

1. நான் தற்போது கடலூர் முதுநகரில் வசித்து வருகிறேன். நான் இறால் வியாபாரம் செய்து வருகிறேன். நான் 7 லாரிகள் வைத்துள்ளேன். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் ஆந்திராவில் ஊடூரில் உள்ள எனது அலுவலகம் மற்றும் வீட்டில் இருந்தபோது எங்களுடைய ஈச்சர் லாரி வண்டியின் என் நினைவில்லை. விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். மேற்படி எனது லாரிகளை எனது மேலாளர் ராமலிங்கம் என்பவர்தான் நிர்வகித்து வந்தார். அவர் தற்போது கொரோனாவில் இறந்துவிட்டார். மேற்படி லாரியில் விபத்து நடந்தபோது யார் ஓட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. மேலாளருக்குத்தான் தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டது.</u>

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

**2.** கடந்த 30.03.2014 ம் தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு என் லாரியில் மீன் லோடு ஏற்றிக்கொண்டு டிரைவர் முரளி என்பவர் கேரளா புறப்பட்டார் என்றும்,

அப்போது திருப்பாப்புலியூர் கம்மியம்பேட்டை ஒரு வழிப்பாதை, சமாதித்தோப்பு என்ற இடத்தில் தர்பூசணி பழம் விற்றுக்கொண்டிருந்த மாயாண்டி என்பவர் மீதும் பிறகு மின்கம்பத்தின் மீதும் லாரி மோதி பிறகு அருகில் இருந்த ராமு என்பவரின் வீட்டின் மீது கவிழ்ந்தது என்றும் அதனால் அங்கு தூங்கிக்கொண்டிருந்த ராமு என்பவர் உடல் நசுங்கி இறந்துவிட்டார் என்று எனக்கு தகவல் கிடைத்து நான் வந்து பார்த்தேன் என்றும், டிரைவர் முரளிக்கு காயம் என கூறினார்கள் என்றும், உடைந்த மின்கம்பத்திற்கு உரிய பணத்தை மின்சார வாரியத்தில் கட்டிவிட்டேன் என்றும் நான் இவை அனைத்தையும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி என்னிடம் வேலை செய்யும் நபர் என்பதால் எதிரியை காப்பாற்றுவதற்காக பிறழ்சாட்சியமாக மாறி பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III,
Cuddalore.